கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், நீவது,
நிலநீர் வட்டம், தரமணி, சென்னை.113.

முன்னிலை: பொறி. கி. உமா, பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர், நீவது.,

செயல்முறை ஆணை எண். நி2/ 1185 /2024 நாள்: 29.08.2024.

பொருள்: நியமனம் (நேரடி) – பொபது மற்றும் நீவது – த.நா.அ.ப.தொகுதி தநாஅப தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு இளநிலை உதவியாளர் பணி நியமனம் செல்வி. ப. பிரீத்தா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், த.நா.அ.ப தேர்வாணையம் செ–03 கடித எண்: 1970/PSD-D2/2023 நாள் 31.08.2023
2. முதன்மைத்தலைமைப்பொறியாளர், நீவது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை.5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/35336/2023/ நாள் 22.09.2023.
3. தலைமைப்பொறியாளர், நீவது, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், சென்னை.113 அவர்களின் செயல்முறை ஆணை எண்.இ2(4)/8012/2023/ நாள் 27.09.2023.
4. இவ்வலுவலகச் செயல்முறை ஆணை எண் நி2/1561/2023/நாள் 04.10.2023

---

பார்வை 1ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணித் தேர்வாணையம் சென்னை கடிதத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு நீர்வளத் துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீவது., சேப்பாக்கம், சென்னை.5 அவர்களின் செயல்முறை ஆணையில் நீர்வளத்துறையின் கீழ் இயங்கும் இந்நிலநீர் அமைப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி வேட்பாளர்களுக்குத் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதி 2017–ன் படி நிலை–8 ரூ.19500–71900 என்ற ஊதிய நிலையில் இளநிலை உதவியாளராகப் பணியேற்கும்பொருட்டு நேரடிப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் தலைமைப்பொறியாளர், நீவது, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், சென்னை.113 அவர்களின் செயல்முறை ஆணையைத் தொடர்ந்து பார்வை 4ல் காணும் இவ்வட்ட அலுவலக செயல்முறை ஆணையின்படி, மறுபணியமர்வாணை வழங்கிய செல்வி. ப. பிரீத்தா அவர்கள் 05.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக இவ்வட்ட அலுவலகத்தில் பணியில் சேர்ந்து தொடர்ச்சியாகப் பணிபுரிந்து வருகிறார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.



Scanned by CamScanner

அதனைத் தொடர்ந்து செல்வி. ப. பிரீத்தா இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 05.10.2023 முற்பகல் முதல் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்தும் தனியருக்கு 05.10.2023 முதல் தகுதிகாண்பருவம் தொடங்கியும் ஆணை வழங்கப்படுகிறது. இவர், மூன்றாண்டு காலத் தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலத்தில் தனது தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், தனியர் தனது தகுதிகாண் பருவத்தினை நிறைவுசெய்ய அரசு விதிகளுக்குட்பட்டு கீழ்க்காணும் துறை தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த ஆணை வழங்கப்படுகிறது.

1. மாவட்ட அலுவலக நடைமுறைத் தேர்வு (DOM) தேர்ச்சி பெற வேண்டும்.
2. பொதுப்பணித்துறை சார்நிலை பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகள் கணக்குத்தேர்வு பாகம் I & II-தேர்ச்சி பெற வேண்டும்.
3. அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகரில் நடைபெறும் இளநிலை உதவியாளருக்கான பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

ஓம்/கி.உமா, 29.08.2024
கண்காணிப்புப் பொறியாளர், நீவது

பெறுநர்:

செல்வி. ப. பிரீத்தா, இளநிலை உதவியாளர்
நிலநீர் வட்டம்,
சென்னை–113.

நகல்: முதன்மைத்தலைமைப்பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீவது, நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை.5 அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: தலைமைப்பொறியாளர், நீவது, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், சென்னை.113 அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

/உ.ந.ப.அ.ப/

கண்காணிப்புப் பொறியாளர், நீவது சார்பில்.
நிலநீர் வட்டம், சென்னை.600 113.

30/08/2024